


**24. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரிட்டன் பிரதமர் Keir Starmer-ருடன் லண்டனில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

2. நாடாளுமன்ற இரு அவைகளும் எதிர்கட்சியினரின் அமளி காரணமாக பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாட்டின் மலைபிரதேச பள்ளிகளில் 100 சதவிகித பணிநியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. முன்னோர்களை வழிபடும் ஆடி அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. Changzhou-வில் சீன ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பி.வி.சிந்து - Unnati Hooda-வை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

**********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரிட்டன் பிரதமர் Keir Starmer-ருடன் லண்டனில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா பிரிட்டன் நாடுகளுக்கிடையேயான பொருளாதார ஒத்துழைப்பை முன்னெடுத்துச்செல்லும் வகையிலான ஆலோசனைகள் இதில் இடம்பெறும்.

இப்பேச்சுவார்த்தைக்கு பின்னர் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரு நாட்டு பிரதமர்கள் முன்னிலையில் கையெழுத்தாகிறது.

இந்த ஒப்பந்தம் பலகோடி டாலர் பெறுமான ஏற்றுமதிக்கு வழிகோல உள்ள நிலையில் இரு நாட்டு வர்த்தக அமைச்சர்களும் இதில் கையெழுத்திடுகின்றனர்.

இதனை தொடர்ந்து இரு நாட்டு பிரதமர்களும் இணைந்து கூட்டறிக்கை வெளியிடுகின்றனர்.

பின்னர் பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு பிரிட்டன் பிரதமர் சார்பில் சிறப்பு விருந்து அளிக்கப்படுகிறது.

பிரதமர் இங்கிலாந்து மன்னர் 3ஆம் சார்ல்ஸையும் சந்தித்து பேச உள்ளார்.

பின்னர் பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது பயணத்தின் அடுத்த கட்டமாக நாளை மாலத்தீவு புறப்பட்டு செல்கிறார்.

**********

**நாடாளுமன்றம்**

பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு ஆள்சேர்ப்பு விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முற்பட்டபோது வாக்காளர் பட்டியல் விவகாரத்தை எழுப்பிய எதிர்கட்சியினர் அவையின் மைய பகுதியிலே குழுமி இவ்விவகாரத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று முழக்கமிட்டனர்.

கேள்வி நேரத்தை நடத்த அனுமதிக்குமாறு அவைத்தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு உறுப்பினர்கள் செவிமடுக்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

இருப்பினும் இந்த அமளியின் ஊடே மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் இயற்கை எரிவாயு தொடர்பான கேள்விக்கு மக்களவையில் பதில் அளித்தார்.

மாநிலங்களவையும் எதிர்கட்சியினரின் அமளி காரணமாக பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலம் இன்றுடன் நிறைவடையும் மதிமுக பொதுச்செயலாளர் திரு.வைகோ, பா.ம.க-வின் டாக்டர் அன்புமணி ராமதாஸ், அஇஅதிமுகவின் திரு.சந்திரசேகரன், திமுகவின் திரு.எம்.சண்முகம், திரு.முகமது அப்துல்லா, உள்ளிட்ட 6 உறுப்பினர்களுக்கு அவை துணை தலைவர் திரு.ஹரிவன்ஷ் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இதில் திமுகவின் திரு.வில்சன் மீண்டும் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் நாளைமுதல் அவரது உறுப்பினர் பதவி காலம் தொடங்க உள்ளது.

**********

**ஹர்தீப்சிங் பூரி – மக்களவை**

நாடுமுழுவதும் தூய்மை எரிசக்தி பெருமளவில் பயன்படுத்தப்படுவதாக மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர், 2014ஆம் ஆண்டு 25 லட்சமாக இருந்த இயற்கை எரிவாயு இணைப்புகள் தற்போது ஒன்றரை கோடியாக அதிகரித்துள்ளது என்றார்.

அதேபோல் சமையல் எரிவாயு இணைப்புகளின் எண்ணிக்கையும் 33 கோடியாக அதிகரித்துள்ளது என்றார்.

உயிரி எரிபொருள் பிரிவில் சாதனை அளவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே எதிர்கட்சிகள் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு ஆள்சேர்ப்பை திரும்ப பெற வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டன.

பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரத்தை எதிர்கட்சிகள் அரசியலாக்குவதாக ஐக்கிய ஜனதாதள் நாடாளுமன்ற உறுப்பினர் குற்றம் சாட்டினார்.

விவாதத்திற்கு மத்திய அரசு தயாராக இருந்த போதிலும் எதிர்கட்சிகள் இதை வேண்டுமென்றே அரசியலாக்குவதாக அவர் குறை கூறினார்.

**********

**முதலமைச்சர்**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நலமுடன் இருப்பதாக சென்னை அப்பல்லோ மருத்துவமனை அறிக்கை தெரிவித்துள்ளது.

அவருக்கு நடைபெற்ற ஆன்ஜியோகிராம் மருத்துவ பரிசோதனை இயல்பாக இருந்ததாக இந்த அறிக்கை கூறுகிறது.

முதலமைச்சர் இன்னும் இரண்டு நாட்களில் வழக்கமான பணிகளை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னையில் செய்தியாளர்களிடம் இன்று பேசிய அமைச்சர் திரு.துரைமுருகன் மருத்துவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப முதலமைச்சர் விரைவில் வீடு திரும்புவார் என்றார்.

**********

**உதயநிதி ஸ்டாலின்**

தமிழ்நாட்டின் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் 100 சதவிகித பணிநியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 2 ஆயிரத்து 457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளை இன்று வழங்கி பேசிய அவர், அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

தொடர்ந்து திறன் இயக்க மாணாக்கர் கையேட்டையும் துணை முதலமைச்சர் வெளியிட்டார்.

முதலமைச்சர் வாழ்த்து செய்தியை இந்நிகழ்வில் பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாசித்தார்.

**********

**பெரியகருப்பன்**

விவசாயம், கல்வி, பொதுமக்களின் அடிப்படை தேவைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமிழக அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் கருவிகளை இன்று பயனாளிகளுக்கு வழங்கி பேசிய அவர், அரசு திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களை சென்றடையும் வகையில் நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

**மா.சுப்பிரமணியன்**

தமிழ்நாட்டில் மக்கள் நலம் காக்கும் புதிய மருத்துவ திட்டத்தை முதலமைச்சர் வரும் 2ஆம் தேதி தொடங்கிவைக்க உள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருத்துவ திட்டங்களிலேயே முத்தாய்ப்பான திட்டமாக இது இருக்கும் என குறிப்பிட்ட அமைச்சர் சென்னையில் மட்டும் 400 இடங்களில் இம்முகாம் நடைபெறும் என்றார்.

**********

**ஆடி அமாவாசை**

முன்னோர்களை வழிபடும் ஆடி அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலில் அதிகாலையிலேயே பக்தர்கள் புனித நீராடி முன்னோர்களுக்கு நேர்த்திகடன் செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

நாகை மாவட்டம் காமேஸ்வரத்தில் ஏராளமானோர் புனித நீராடி தங்கள் முன்னோர் நினைவாக திதி செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடலில் ஏராளமானோர் மக்கள் புனித நீராடி வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

காவிரி பாயும் தஞ்சை திருவையாறு புஷ்ப மண்டப படித்துறையில் ஏராளமானோர் புனிதநீராடி மூதாதையர்களுக்கு தர்ப்பணம் கொடுத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கையில்

**வாய்ஸ்**

திருப்பூர் உடுமலை திருமூர்த்திமலை, பாலாற்றின் கரையில் ஏராளமான மக்கள் நேர்த்திகடன் செலுத்தினர்.

மாநிலத்தின் முக்கிய நீர்நிலைகளில் மக்கள் தங்கள் முன்னோர்களுக்கு திதி கொடுத்து இன்று சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டனர்.

**********

**மேட்டூர்**

மேட்டூர் அணை நடப்பாண்டு 4ஆவது முறையாக அதன் முழு கொள்ளளவை எட்ட உள்ள நிலையில் காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

16 கண் மதகுகள் பகுதிகளில் கால்நடைகளை அப்புறப்படுத்தும் பணிகளில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

**********

**மாணாக்கர் சேர்க்கை**

சித்தா ஆயுர்வேதம், யுனானி ஹோமியோபதி பாரம்பரிய மருத்துவ படிப்புகளுக்கான மாணாக்கர் சேர்க்கைக்கு இன்றுமுதல் tnhealth.tn.gov.in வலைதளத்தில் விண்ணப்பிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

நடப்பு கல்வியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் சுய நிதி கல்லூரிகள் இந்திய மருத்துவம், ஹோமியோபதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு மற்றும் அகில இந்திய ஒதுக்கீடு, நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**********

## NIT

திருச்சிராப்பள்ளி தேசிய தொழில்நுட்ப கல்வி கழகத்தின் 21ஆவது பட்டமளிப்பு விழா நாளை மறுநாள் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் 2 ஆயிரத்து 45 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட உள்ளதாக இக்கல்வி நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஜி.அகிலா இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதில் 175 முனைவர் பட்டதாரிகள் அடங்குவர்.

தேசிய கல்வி கொள்கை 2020-ன் அடிப்படையில் கல்வி கட்டமைப்பு சீரமைக்கப்பட்டு, இளநிலை முதுநிலை கல்வி நிலைகளில் நெகிழ்வான பாடதிட்டம் நடைமுறைபடுத்தப்படுவதாக அவர் கூறினார்.

உலகளாவிய பொருளாதார சவால்களின் மத்தியிலும் வேலை வாய்ப்பு செயல்முறையில் 286 நிறுவனங்கள் பங்கேற்று ஆயிரத்து 322 பேர் வேலை வாய்ப்புகளை பெற்றிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

**********

## இருவரி

**தமிழ்நாட்டில் குழந்தைகள் நலனுக்கு** சேவையாற்றும் நிறுவனங்கள் ஒரு லட்சம் ரூபாய் பரிசுதொகையுடன் கூடிய விருதுபெற உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என மாநில சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அறிவித்துள்ளது.

**திருச்சி மாவட்டத்தை சேர்ந்த கிராமப்புற** இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்பட இருப்பதால் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் சொந்த கட்டிடங்களில்** இயங்கும் கிறிஸ்தவ தேவாலயங்கள், புனரமைத்தல் பணிகளுக்காக அரசின் மானியதொகை பெற விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி கூறியுள்ளார்.

**தர்மபுரி அரசு கலை கல்லூரியில் தனியார்துறை** வேலை வாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்** நாள் கூட்டம் நாளை நடைபெற உள்ளது.

**திருவாரூர் மாவட்டத்தில் சட்டவிரோத மது** விற்பனை செய்தவர்களுடன் தொடர்பில் இருந்ததாக உறுதிசெய்யப்பட்ட 3 காவலர்களை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. Karun Garad உத்தரவிட்டுள்ளார்.

**விருதுநகர் மாவட்டம் சதுரகிரி தானிப்பாறையில்** 50 ஆண்டுகள் ஆக்கிரமிப்பில் இருந்த 15 கோடி ரூபாய் மதிப்பிலான புறம்போக்கு நிலம் மீட்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் டாக்டர் *Sukhaputra* தெரிவித்துள்ளார்.

**உதகையில் தொடர்மழை காற்று காரணமாக பைன்** ஃபாரஸ்ட், 8ஆவது மைல், ட்ரீ பார்க் ஆகிய சுற்றுலா தளங்கள் இன்றுஒருநாள் மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

**********

## தண்ணீர் திறப்பு

ஈரோடு மாவட்டம் குண்டேரிபள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து புஞ்சை பாசனத்திற்காக இன்று முதல் வரும் 30-ம் தேதிவரை தண்ணீர் திறக்கப்பட்டது.

இதன்மூலம் கோபிச்செட்டிப்பாளையம் வட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 498 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

**********

## பேட்மிண்டன்

Changzhou-வில் சீன ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை முன்னேறியது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை - இந்தோனேசிய இணையை 21-19 21-19 என்ற நேர் செட்களில் வென்றது.

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பி.வி.சிந்து - Unnati Hooda-வை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறார்.

**********

**செஸ்**

ஜார்ஜியாவில் நடைபெறும் ∴பிடே மகளிர் உலக கோப்பை சேம்பியன் பட்ட செஸ் இறுதி சுற்றுக்கு இந்தியாவின் திவ்யாதேஷ்முக் முன்னேறியுள்ளார்.

உலக கோப்பை சதுரங்க இறுதி சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற சாதனையை இதன்மூலம் திவ்யா படைத்துள்ளார்.

இரண்டாவது அரையிறுதியில் கொனேரு ஹம்பி - சீனாவின் லீ டின் ஜியை எதிர்கொள்கிறார்.

**********

**கிரிக்கெட்**

மான்செஸ்டரில் இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 264 ரன் எடுத்திருந்தது.

ஷர்துல் தாக்கூர், ரவீந்திரஜடேஜா களத்தில் உள்ள நிலையில், 2ஆம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**